பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 15 புதன்கிழமை 02.11.2022 கதிர் 249

## காங்கேசன்துறை முகாமில் கடற்படை சிப்பாயின் சடலம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை கடற்படை முகாமில் இருந்து கடற்படைச் சிப்பாயின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கண்டியைச் சேர்ந்த சன்னி அப்புக்கே சுரங்க ரொாந்த சில்வா (வயது 34) எனும் சிப்பாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக தெல்லிப்பளை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# எமது நிலம் எமக்கு வேண்டும்; அரச படைகளே வெளியேறுக!

### வலிகாமம் வடக்கு ஆக்கிரமிப்புக்கு எதிராக தெல்லிப்பழையில் விண்ணதிரக் கோஷம்






யாழ்., வலிகாமம் வடக்கில் பாதுகாப்புத் தரப்பின் ஆக்கிரமிப்பிலுள்ள பொது மக்களின் காணிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் அரசின் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று தெல்லிப்பழையில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2

## மஹிந்த கௌரவத்துடன் வீட்டில் இருக்க வேண்டும்

### 'மீண்டெழுவோம்' பயணத்துக்கு எதிராக பிரசன்ன போர்க்கொடி



மஹிந்த ராஜபக்சவைக் காட்சிப்படுத்திக்கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியால் முன்னெடுக்கப்படும் 'ஒன்றாக மீண்டெழுவோம்' எனும் வேலைத்திட்டத்தை நான் கடுமையாக எதிர்க்கின்றேன்.

– இவ்வாறு ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியால் களுத்துறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் நடைபெற்ற நாளில்

2

## அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் கொழும்பில் பிற்பகல் ஆரம்பம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் கொழும்பில் இன்று பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகியுள்ளது.

2

## பாணந்துறை பிரபல பாடசாலையில் 50 மாணவர்களுக்கு மூச்சுத்திணறல்

### வைத்தியசாலையில் சேர்ப்பு

பாணந்துறை நகரின் பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 50 மாணவர்கள் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த மாணவர்கள் இன்று முற்பகல் சுகயீனமுற்ற நிலையில் பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர். சுவாசக்கோளாறு காரணமாக அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. பாடசாலையை அண்மித்த பகுதியில் ரயர்கள் எரியூட்டப்பட்டமையால் மாணவர்களுக்குச் சுவாசக்கோளாறு ஏற்பட்டிருக்கலாம் என்று பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித் துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணை களை பாணந்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யானை தாக்கி ஒருவர் மரணம்

காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவம்தம்புத்தேகம – கொத்மல்புர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காட்டு யானைகளின் அச்சுறுத்தல் குறித்து வன விலங்கு அதிகாரிகளுக்குப் பலமுறை அறிவுறுத்தியும் எந்தப் பயனும் இல்லை என்று கிராம மக்கள்

2

## போராட்டத்துக்கு அழைப்போர் நாட்டின் தேசத் துரோகிகளாம்

### ரணிலின் சகா கண்டுபிடிப்பு



நாடு மீண்டெழுந்துவரும் நிலையில், போராட்டங்களுக்கு அழைப்பு விடுப்பவர்கள் தேசத் துரோகிகளாவர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகள் இணைந்து கொழும்பில் இன்று

2

## அம்பாறையில் தமிழரின் எதிர்காலத்தை குழிதோண்டிப் புதைக்கின்றார் ஹரீஸ்!

### கலையரசன் பகிரங்கக் குற்றச்சாட்டு



கல்முனையில் தமிழ்ச் சமூகத்தை அழிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீஸ் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தை முடக்குவதற்குப் பல குழுக்களை உருவாக்கியும் கிராம ரீதியான எல்லையை நிர்ணயித்தும் குளங்களை மண் போட்டு நிரப்பியும் தமிழ் மக்களின் பூர்வீக இடங்களைக் கபளீரம் செய்தும் தமிழ் மக்களின் எதிர்காலத்தைக் குழிதோண்டிப் புதைக்கின்ற செயற்பாட்டைச் செய்து வருகின்றார்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் குற்றம் சாட்டினார்.

சொறிக்கல்முனை ஹோலிக் குறோஸ் வித்தியாலய அதிபர் மற்றும் உயர்தரத்தில்

8

## ஈஸ்டர் தாக்குதல் வழக்கு: ரிஷாத் எம்.பி. விடுதலை



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக குறித்த வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே இன்று உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2

## மஹிந்த ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நான் வெளிநாடு சென்றிருந்தேன். அதில் பங்கேற்கவில்லை.

கடைசியாக புத்தளம் – ஆராச்சி கட்டுவையில் நடைபெற்ற கூட்டத்துக்குச் சென்றிருந்தேன், அண்ணன் பிரசன்ன கூட்டத்தில் உரையாற்றுகின்றீர்களா என சனத் நிரந்த என்னிடம் வினவினார்.

அதற்கு நான் உடன்படவில்லை. 'மீண்டெழுவோம்' வேலைத்திட்டத்துக்கு நான் எதிர்ப்பு என வெளிப்படையாக கூறினேன்.

ஏனெனில் மஹிந்த ராஜபக்சவால் தான் நாம் சுதந்திரமாக நடமாடுகின்றோம். எனவே, அரசியலில் இருந்து அவரை கௌரவமாக விடைபெறுவதற்கு இடமளித்திருக்க வேண்டும். அதை நாம் செய்யவில்லை. எதற்காக மீண்டும் அவரைக் கொண்டுவர வேண்டும் என்பதே எனது வாதம். நாமல் ராஜபக்ச விடமும் நான் இதையே குறிப்பிட்டேன்.

அதேவேளை, நாட்டை பொறுப் பேற்காமல் தலைவர்கள் பின்வாங்கி னார்கள். ரணில் விக்கிரமசிங்க துணி வுடன் ஏற்றார். எனவே, அவரின் காலை வாருவதற்கு நாம் தயாரில்லை – என்றார்.

## யானை தாக்கி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்துள்ளனர். நான்கு பிள் ளைகளின் தந்தையான நவரத்ன திஸாநாயக்க (வயது 59) நேற்று மாலை மோட்டார் சைக்கிளில் தனது வயல் பகுதிக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவர் வயலுக்குச் சென்று கொண்டிருந்த போது காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக் காகியுள்ளார்.

மகன் மற்றும் பிரதேச மக்கள் அவ தம்புத்தேகம ஆதார வைத்தியசா லையில் சேர்க்கப்பட்ட போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என்று மருத்துவர்கள் குறிப்பிட்டனர்.

தொடர்ந்து காட்டு யானைகளின் தாக்குதல் சம்பவங்கள் அங்கு பதிவாகி வருகின்றன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், தீர்வு காணப்படவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், யானை – மனித மோதலை குறைப்பதற்கான வேலைத் திட்டம் இந்த வருட இறுதிக்குள் தயாரிக்கப்படும் என்று வனவிலங்கு மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## போராட்டத்துக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாலை முன்னெடுக்கவுள்ள போராட்டத் தைச் சாடும் வகையிலேயே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கொழும்பில் மீண்டும் அணிதிரளு மாறு மக்களுக்குச் சில குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். இவர்கள் தேசத்துரோகிகள்.

எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்டோர் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கினால் அவர்களும் தேசதுரோகிகள்தான். சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தர ஆரம்பித்துள்ள நிலையில், பேரணி களை நடத்தி, குழப்ப நிலை உள்ளது என்பதை காண்பிக்கவே இவர்கள் முற்படுகின்றனர். ஜனநாயகத்தை மதி க்கின்றோம். அதற்காக ஜனநாயகத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு இட மளிக்கக்கூடாது.

நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலையில் அதனை மீட்பதற்கு பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுதந்திரம் இருக்கின்றது, அதற்காக எல் லைமீறி செயற்படக்கூடாது.

எனவே, தேசத்துக்காக நாம் ஒன்றி ணைவோம். வீதிகளில் அலைவதால் பிரச்சினைகள் தீராது. போராட்டம் நடத் துவதால் கிடைக்கப் போவது என்ன? – என்றார்.

## ஈஸ்டர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ரிஷாத் பதியுதீன் எம்.பி. குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசின் அடக்குமுறைச் செயற்பாடுக ளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பயங்கர வாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரியும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் ஏற்பாளார் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரையும் உடன் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரியும் கொழும்பு – மருதனை எல். பின்ஸ்டன் மண்டபத்துக்கு முன் னால் உள்ள சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட் டப் பேரணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேரணி கொழும்பு – கோட்டை ரயில் நிலையம் வரை செல்லவுள்ள தோடு அங்கு பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

## எமது நிலம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகங்களின் மாணவர்கள், சிவில் அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள், மதகுருமார்கள், தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள் மற்றும் பொதும க்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்துக்கான முன் ஏற்பாடாக இன்று காலை 8 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்றலில், யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல் கலைக்கழகங்களின் மாணவர்கள் ஒன்றுகூடி, வாகனப் பேரணியாக தெல் லிப்பழை சந்தி நோக்கிப் புறப்பட்டனர்.

வலிகாமம் வடக்கு எமது பூர்வீக இடம், எமது நிலம் எமக்கு வேண்டும், அரசபடைகளே உடன் வெளியேறுங்கள் போன்ற கோங்களுடன் காலை 10 மணி யளவில் தெல்லிப்பழை சந்தியிலிருந்து ஆரம்பமான கண்டனப் பேரணி தெல் லிப்பழை பிரதேச செய லகத்தை நோக்கி நகர்ந்தது.

பிரதேச செயலகத்தை முற்றுகை யிட்ட போராட்டக்காரர்கள், திடீரெனப் பிரதேச செயலகத்துக்குள் நுழைந்தனர்.

இதன்போது காணி அமைச்சி னுடைய மேலதிக செயலாளர், 1674 ஏக்கர் நிலத்தை சுவீகரிப்பதற்கு உத்தரவு இட்டு தெல்லிப்பளை பிரதேச செயலா ளருக்கு அனுப்பி வைத்தார் எனக் கூறப்படும் கடிதம் தீயிட்டு எரிக்கப்பட்டது.

இந்த முற்றுகைப் போராட்டத்தைத் தொடர்ந்து தெல்லிப்பளை பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் போராட் டக்காரர்களால் கையளிக்கப்பட்டது.

விளம்பரங்களுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha , Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK
BOC Sampath Bank COMMERCIAL BANK HNB

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## பயங்கரவாதத் தடைச் சட்டம்

மிகக் கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் குரூர முகத்தைக் காட்டும் மற்றொரு சான்றாதாரம் இன்று வெளியாகி இருக்கின்றது.

படைக்கட்டமைப்பு மற்றும் பொலிஸ் துறையைச் சேர்ந்த எவரும் தமக்கு விரும்பியவரை, தம்மிஷ்டப்படி தடுப்பு காவலில் வைத்து நசித்து, அடக்கி, அவர்களின் வாழ்க்கையையே தொலைக்கச் செய்யும் கொடுங்கோல் கருவியே – நீதி முறைமைக்கு மாறான ஒழுங்கு விதியே – பயங்கரவாதத் தடுப்பு சட்டம் என்று விமர்சிக்கப்பட்டு வந்தது.

அதையும் தாண்டி ஆட்சியதிகாரத்தில் இருக்கும் அரசியல் தரப்புகள், தங்கள் காழ்ப்புணர்வுகளை –விரோதங்களை – பழிவாங்கலாகப் பிரயோகிக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீதித்துறையின் பெயரால் வழி வகுக்கின்றது என்றும் குற்றச்சாட்டப்பட்டு வருகின்றது.

அதை நிரூபிக்குமாற் போல் இன்றைய நீதிமன்ற உத்தரவு வெளியாகி இருக்கிறது.

ஈஸ்டர் தொடர் குண்டு வெடிப்பு தாக்குதல்களை ஒட்டி, குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் உழன்ற முன்னாள் அமைச்சரும், தற்போதைய எம்.பியுமான ரிசாத் பதியுதீன் எந்தக் குற்றமும் இழைக்காத ஒருவர் எனத் தெரிவித்து நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

வழக்கு விசாரணை இப்படித்தான் முடியும், இது வேண்டுமென்றே அரசியல் காழ்ப்புணர்வில் முன்னெடுக்கப்படுகின்ற சின்னத்தனமான நடவடிக்கை என்று 2021 ஏப்ரலில் அவர் கைதான சமயத்திலேயே பல தரப்புகளினாலும் அடித்துக் கூறப்பட்டது. அதுவே இப்போது நிரூபணமாகியிருக்கின்றது.

கொரோனா தொற்றில் உயிரிழந்தவர்களைப் புதைத்தால் கொரோனா வைரஸ் பரவிவிடும் என்று உலகில் வேறு எங்கும் இருக்கின்ற விஞ்ஞானிகள், மருத்துவர்கள், ஆய்வாளர்கள், நிபுணர்கள் கண்டுபிடிக்காத விஞ்ஞான உண்மையை, இலங்கையின் பேரினவாத விஞ்ஞானிகளும் நிபுணர்களும் கண்டுபிடித்தார்கள் என்று தெரிவித்து, அதன் அடிப்படையில் தொற்றில் உயிரிழந்த முஸ்லிம்களினதும் கிறிஸ்தவர்களினதும் உடலங்களை, அவர்களின் மத சம்பிரதாயங்களுக்கு முற்றிலும் மாறான முறையில், வல்வந்தமாக எரிக்கும் நடவடிக்கையை உறுதிப்படுத்தி நின்றவர்கள் இந்தத் தீவின் பௌத்த, சிங்களப் பேரினவாதத் தலைவர்கள்.

அவர்களின் வழிகாட்டலில் மேற்படி கொடூரமான, குரூரமான, மிருகத்தனமான, மனிதப் பண்பியல்புகளுக்கு மாறான பயங்கரவாதத் தடைச் சட்டமும் அப்படி இழிவான முறையில்தான் பயன்படுத்தப்படும், பயன்படுத்தப்படுகின்றது என்பது உலகறிந்த இரகசியம்.

அதன் நிரூபணமே, முஸ்லிம்களுக்காகக் குரல் எழுப்பி வரும் அவர்களின் தலைவரான ரிசாத் பதியுதீன் அர்த்தமற்ற முறையில் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்பு காவலில் உழன்று, இப்போது குற்றமே இழைக்காதவர் என்று நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றமையுமாகும்.

அதிகாரத் தரப்பின் எதேச்சாதிகாரத்திற்கும், பாதுகாப்புத் துறையின் அராஜகத்துக்கும் துணை போகும் அநீதியான சட்ட விதியே பயங்கரவாத தடைச் சட்டம்என்பது மீண்டும் ஒரு தடவை நிரூபணமாகி இருக்கின்றது. அவ்வளவுதான்!

# நாட்டில் இடம்பெறும் எதிர்ப்புப் பேரணிகளால் சுற்றுலாத்துறை மீண்டும் தடைப்படலாமாம்!

## ஹரினுக்கு வருத்தம்



இன்று இடம்பெறுகின்ற போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கலந்துகொண்டால் அது சுற்றுலாத் துறைக்கு இடையூறாக அமையும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸவுக்கு தலைமைப் பண்பு இல்லை என்றும் அந்த குணங்கள் அவரால் காட்ட முடிந்திருந்தால் இன்று நாட்டின் ஜனாதிபதியாக அவர் இருந்திருப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் நாட்டில் சுற்றுலாத்துறை தற்போது வளர்ச்சியடைந்து வருவதாகவும் அதனை மீண்டும் தரைமட்டமாக்க வேண்டாம் எனவும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ வேண்டுகோள் விடுத்தார்.

# யாழில் தொடர் மழையால் 11 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 11 குடும்பங்கள் தொடர் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக குறைத்த 11 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் தமது இருப்பிடங்களை விட்டு காக்கை தீவு மீனவ சங்கத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் சிறு வர்கள், பெண்கள் அடங்குகின்றமையுடன் இவர்களின் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்ததால் தொடர்ந்து வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேற்படி பிரதேசங்களில் தொடர்ச்சியான மழைக்காலங்களில் இவ்வாறான பாதிப்புகள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாள் விழா யாழில்!

இந்தியாவின் இரும்பு மனிதர் என போற்றப்படும் சர்தார் வல்லபாய் படேலுடைய பிறந்த நாள் கடந்த திங்கட்கிழமை யாழ்.இந்திய துணைத் தூதரகத்தால் கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் பட்டேலின் கண்காட்சியை யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் மற்றும் ஓய்வு பெற்ற பேராசிரியர் சிவலிங்கராசா திறந்து வைத்து பார்வையிட்டனர்.

தொடர்ந்து, ஒற்றுமை மனித சங்கிலியும் அதனை தொடர்ந்து ஒற்றுமை ஓட்டம் கலாசார மையத்திலிருந்து யாழ்.இந்திய துணைத் தூதரகம் வரை இடம்பெற்றது.

# ‘மரம் நாட்டுவோம்; எதிர்கால சந்ததியைப் காப்போம்’ மன்னாரில் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார் சாள்ஸ்!

‘மரம் நாட்டுவோம் எதிர்கால சந்ததியைப் பாதுகாப்போம்’ எனும் தொனிப் பொருளில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதனின் எண்ணக்கருவில் வன்னி மண் அறக்கட்டளையின் நெறிப்படுத்தலில் இந்த மர நடுகைத் திட்டம் ஆரம்பமானது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) மர நடுகை திட் டம் மடு கல்வி வலத்திற்குற்பட்ட மன் – அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், மன்னார் மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரிகள், அடம்பன் பொலிஸார் ,பழைய மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது தேசிய மரமான நாக மரத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.



# அமெ. – தென் கொரிய கூட்டுப் பயிற்சியை நிறுத்துமாறு வடகொரியா கடும் எச்சரிக்கை



பியாங்யாங், நவ.02

வடகொரியாவின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அமெரிக்கா மற்றும் தென்கொரியா படைகள் கொரிய எல்லையில் தொடர்ந்து போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக வடகொரியா தொடர்ச்சியாக ஏவுகணைகளை ஏவி சோதித்து வருகிறது. ஆனால் அமெரிக்கா மற்றும் தென்கொரியா இதனைப் பொருட்படுத்தாமல் கூட்டுப்போர் பயிற்சியை தொடர்ந்து வருகின்றன.

அந்த வகையில் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் விமானப்படைகள் மிகப்பெரிய கூட்டுப் பயிற்சியை நேற்று முன்தினம் தொடங்கின. இருநாட்டு விமானப் படைகளையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான விமானங்கள் 24 மணி நேரமும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் தென்கொரியாவுடனான கூட்டுப்போர் பயிற்சியை நிறுத்தாவிட்டால் அமெரிக்காவுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என வடகொரியா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து வடகொரியா வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

அமெரிக்கா தனது பாதுகாப்பு நலன்களுக்குப் பொருந்தாத எந்தவொரு தீவிரமான முன்னேற்றங்களையும் விரும்பவில்லை என்றால், அது பயனற்ற போர் பயிற்சிகளை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லை என்றால், அவர்கள் அனைத்து விளைவுகளுக்கும் முற்றிலும் பழியை ஏற்க வேண்டியிருக்கும். கடுமையான இராணுவ ஆத்திரமூட்டல்களில் அமெரிக்கா தொடர்ந்து நீடித்தால் வடகொரியா மிகவும் கடுமையான பதிலடி நடவடிக்கைகளை கையில் எடுக்கும் என கூறப்பட்டுள்ளது.

# இளம் சொல்லிசைப் பாடகர் அமெரிக்காவில் சுட்டுக் கொலை



வாஷிங்டன், நவ.2

அமெரிக்காவின் டெக்சாஸ்மாகாணத்தில்ஹூஸ்டன் நகரில் பிரபல சொல்லிசைப் (ராப்) பாடகர் டேக்ஓவ் மர்ம நபர்கள் சிலரால் சுட்டு கொல்லப்பட்டு உள்ளார். பகடைக் காய் விளையாட்டின் போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் திடீரென சிலர் துப்பாக்கி சூடு நடத்திய போதே அவர் கொல்லப்பட்டார் எனக்கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் டேக்ஓவ்வின் தலை அல்லது கழுத்துக்குப் பக்கத்தில் குண்டு பாய்ந்து உள்ளது எனக் கூறப்படுகிறது. இதனால், சம்பவ பகுதியிலேயே அவர் உயிரிழந்து உள்ளார். அப்போது அந்த பகுதியில் 50 பேர்வரை இருந்துள்ளனர். இந்த தாக்குதலில் 2 பேர் காயமடைந்து உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் சிகிச்சைக்காக உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஜோர்ஜியாவின் லாரன்ஸ்வில்லே பகுதியில் கிர்ஷ்னிக் காரி பால் என்ற பெயரில் பிறந்தவரான டேக்ஓவ் 2008 ஆம் ஆண்டு ராப் இசையில் தனது மாமாவுடன் தன்னை இணைத்து கொண்டார்.

2011 ஆம் ஆண்டில் இந்த குழுவினர் மிகோஸ் என்ற பெயரிலான ராப் இசை குழுவை தொடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குரங்கு அம்மை பரவல் தீவிரத்தால் சுகாதார அவசர நிலை அறிவிப்பு!




ஜெனிவா, நவ.02

உலகளவில் குரங்கு அம்மை நோய் பரவல் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில், மறுபுறம் புதிய நோய் தொற்று பரவல் எண்ணிக்கை சில நாடுகளில் இன்னும் அதிகரித்து வருகின்றதாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில் சர்வதேச பொது சுகாதார அவசர அச்சுறுத்தலாக குரங்கு அம்மை நோய் பரவல் இருந்து வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

பல நாடுகளில் பரவும் குரங்கு அம்மை நோய் பரவல் குறித்த அவசரக் குழுவின் மூன்றாவது கூட்டம் நிகழ்நிலையில் நடாத்தப்பட்டது. இந்தக் குழுவின் 15 உறுப்பினர்களில் 11 பேரும், 9 ஆலோசகர்களில் 6 பேரும் கூட்டத்தில்பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தின் போது உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் ஜெனரல் டாக்டர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் பேசுகையில் –

உலகளவில் குரங்கு அம்மை நோய் பரவலில் முன்னேற்றம் ஏற்பட்டாலும், சில நாடுகளில் சரிவை சந்தித்து வருகிறது. அமெரிக்கா மற்றும் ஆப்பிரிக்காவின் பிராந்தியங்களில் சில நாடுகளில் நோய் தொற்று அபாயம் அதிகரித்து?வருகின்றது, மேலும் சில நாடுகளில் குறைவாகப் பதிவாகியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதனிடையே, 100க்கும் மேற்பட்ட நாடுகளில் 70,000 உறுதிப்படுத்தப்பட்டகுரங்கு அம்மை நோய் பாதிப்புகள் பதிவாகியுள்ளன. பெரும்பாலானவை ஆண்கள் மத்தியில் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவுக்குப் பயந்து தொழிலை விட்டு ஓடுகின்ற சீனத் தொழிலாளர்கள்

பீஜிங், நவ.2

சீனாவில் கொரோனாப் பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகின்ற காரணத்தினால் பல்வேறு இடங்களிலும் இருந்து தொழில் நிமித்தம் வேறு மாகாணங்களில் தொழில்புரிந்து வருகின்ற பல நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும், ஊரடங்கு அறிவிப்புகள் வெளியானால் தமது இடங்களுக்குச் செல்ல முடியாது என்றும் கொரோனாவினால் பாதிப்படையக் கூடாது என்ற முன்னேற்பாட்டிலும் தொழில்புரியும் இடங்களில் இருந்து வெளியேறுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகின்றமையால் சீனாவின் அந்தந்த மாகாண நிர்வாகங்கள் ஊரடங்கு உள்ளிட்ட கட்டுப்பாடுகள் விதித்து வருகின்றன. இந்த நிலையில் செங்க்சோவ் பகுதியில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் அங்கு பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் அப்பிள் நிறுவனத்தின் மின்னணு சாதனங்களை தயாரிக்கும் பாக்ஸ்கான் நிறுவனத்தின் ஐ–போன் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இங்கு 3 லட்சம் பேர் பணியாற்றி வருகிறார்கள். இந்த தொழிற்சாலையில் பல ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இந்த நிலையில் ஊரடங்குக்குப் பயந்து ஊழியர்கள் பலர் ஐ–போன் தொழிற்சாலையில் இருந்து தப்பி ஓடுகின்றனர் எனக் கூறப்படுகின்றது. குறிப்பாக தொழிற்சாலையின் வேலியில் ஏறி, தாண்டி குதித்து ஊழியர்கள் தப்பி செல்லும் காணொலிகளும் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

ஊரடங்கு காரணமாக போக்குவரத்து சேவைகள் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளதால்

ஊழியர்கள் 100 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தமது சொந்த ஊர்களுக்கு நடைப்பயணமாக செல்ல தொடங்கியுள்ளமையுடன், அவர்கள் வீதியோரம், வயல்வெளிகள், மலைகளிலும் சிறிது நேரம் தஞ்சம் அடைந்தபடி மெதுவாக நடந்து செல்கின்றனர் என்று கூறப்படுகின்றது. மேலும், சொந்த ஊர்களுக்கு நடைபயணமாக செல்லும் ஊழியர்களுக்கு உள்ளூர் மக்கள் இலவச விநியோக நிலையங்கள் அமைத்து உணவு வழங்குகிறமையும் குறிப்பிடத்தக்கது.



# பாக். பிரதமர் சீனா விஜயம்




இஸ்லாமாபாத், நவ.02

பாகிஸ்தான் பிரதமர் பொஸ் ஷெரீப் இரண்டு நாள் பயணமாக நேற்று சீனா சென்றுள்ளார். சீன பிரதமர் லீ கெகியாங் விடுத்த அழைப்பின் பேரில் பொஸ் ஷெரீப் அங்கு சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த பயணத்தின்போது அதிபர் ஜின்பிங் உள்பட சீன அரசின் உயர்மட்ட தலைவர்களுடன் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக பொஸ் ஷெரீப் பல்வேறு கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பாகிஸ்தானில் சீனாவின் முதலீடுகள் குறித்தும், சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்திற்கான திட்டங்கள் குறித்தும் அவர் முக்கிய ஆலோசனைகளை நடத்துவார் எனத் தெரிகிறது. பொஸ் ஷெரீப் கடந்த ஏப்ரல் மாதம் பாகிஸ்தானின் பிரதமராக பதவியேற்றமைக்குப் பிறகு முதல் முறையாக சீனாசென்றுள்ளார். அதே போன்று சீனாவின் அதிபராக ஜின்பிங் மூன்றாவது முறையாகதேர்வு செய்யப்பட்டதற்கு பின் அவரை சந்திக்கும் முதல் வெளிநாட்டு தலைவர் பொஸ் ஷெரீப் ஆவார். இதனால் அவருடைய இந்த பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

# மோர்பி பால விபத்துக்கு சீன ஜனாதிபதி இரங்கல்



பெய்ஜிங், நவ.02

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோர்பி தொங்குபால விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு சீன அதிபர் ஜீ ஜின்பிங் இரங்கல் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

குஜராத் மாநிலம் மோர்பி நகரில் மச்சு ஆற்றின் குறுக்கே 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையான தொங்கு பாலம் கடந்த சில நாள்களுக்கு முன் பயன்பாட்டிற்கு மீண்டும் திறக்கப்பட்டது. இதனிடையே, சாத் பூஜை மற்றும் விடுமுறையையொட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்த தொங்குபாலத்தில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என நூற்றுக்கணக்கான மக்கள் குவிந்தனர். அப்போது பாரம் தாங்காமல் திடீரென தொங்குபாலம் அறுந்து விழுந்ததில் இதுவரை 150 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும், ஆற்றில் இருந்து 200க்கும் மேற்பட்டோர் உயிருடன் மீட்கப்பட்டனர். ஆற்றுக்குள் மேலும் சிலர் விழுந்திருக்கலாம் என அஞ்சப்படுவதால் மீட்பு மற்றும் தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த துயர சம்பவத்திற்கு உலக நாடுகளில் இருந்து இரங்கல்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் குஜராத் விபத்திற்கு சீன அதிபர் ஜி ஜின்பிங் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதி திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு சீன அதிபர்

ஜி ஜின்பிங் அனுப்பியுள்ள இரங்கல் செய்தியில், சீன அரசாங்கம் மற்றும் சீன மக்கள் சார்பாக, குஜராத் பாலம் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களதுகுடும்பத்தினருக்கும் காயமடைந்தவர்களுக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனக் கூறப்பட்டுள்ளது.

## அகில இந்திய வங்கிப் பணியாளர்கள் நவம்பர் 19ஆம் திகதி வேலைநிறுத்தம்




அவுரங்காபாத்,நவ.2

இந்தியாவில் செயற்படும் வங்கி நிர்வாகத்தினர் ஊழியர்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்களது கோரிக்கைகளை செவிமடுக்காது தன்னிச்சையாக செயற்படுகின்றனர் என்பது உள்ளிட்ட சில குற்றச்சாட்டுகளை முன்வைத்து அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்கத்தினர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அகில இந்திய வங்கி பணியாளர்கள் சம்மேளனம் சார்பில் தேவிதாஸ் துல்ஜபுர்கார் நேற்று ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

வங்கி ஊழியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் வங்கி நிர்வாகங்கள் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கின்றன. இருதரப்புகளும் கலந்து முடிவு எடுக்கும் வழக்கத்தை கைவிட்டு விட்டன. இருதரப்பு தீர்வு தொடர்பான அனைத்து விதிமுறைகளையும் மீறி வருகின்றன. மத்திய அரசின்

தொழிலாளர் நலத்துறை பிறப்பிக்கும் உத்தரவுகளையும் வங்கி நிர்வாகங்கள் கடைபிடிப்பது இல்லை. நிர்வாகம்-பணியாளர் உறவை அலட்சியப்படுத்துகின்றன.

பேங்க் ஆப் மகாராஷ்டிரா, பேங்க் ஆப் இந்தியா, பேங்க் ஆப் பரோடா, சென்டிரல் பேங்க் ஆப் இந்தியா, பெடரல் வங்கி, சோனாலி வங்கி, கத்தோலிக் சிரியன் வங்கி, கனரா வங்கி ஆகிய வங்கிகளின் நிர்வாகங்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், வங்கி ஊழியர்களிடையே பரவலாக கலக்கம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே, அனைத்து வங்கிகளி லும் உள்ள அகில இந்திய வங்கிப் பணியாளர் சம்மேளனத்தின் உறுப்பினர்கள், வருகின்ற 19 ஆம் திகதி ஒருநாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்கள். இந்த வேலைநிறுத்தம் தவிர்க்க முடியாதது. -என்று அவர் கூறியுள்ளார்.




## நேபாளத்தின் பொதுத் தேர்தலுக்காக இந்தியா 200 வாகனங்கள் அன்பளிப்பு

காத்மண்டு, நவ.02

இந்தியாவின் நட்பு நாடான நேபாளத்தில் இந்த மாத இறுதியில் பொது தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு அந்நாட்டுக்கான இந்திய தூதர் நவீன் ஸ்ரீவஸ்தவா, நேபாள நிதி அமைச்சர் ஜனார்தன் சர்மாவிடம் இந்தியா சார்பில் 200 வாகனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

நேபாள பொது தேர்தலின்போது, பல்வேறு நேபாள அமைப்புகளுக்கு, போக்குவரத்து உள்ளிட்ட விடயங்களுக்கு ஆதரவாக இருக்கும் வகையில் இந்த அன்பளிப்பை இந்தியா வழங்கியுள்ளது என காத்மண்டுவில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. நேபாளத்திடம் ஒப்படைக்கப்பட்ட இந்த 200 வாகனங்களில், தேர்தலின்போது பாதுகாப்பு பணி மேற்கொள்வதற்காக பாதுகாப்பு படைகளுக்கு 120 வாகனங்கள் வழங்கப்படும். மீதமுள்ள 80 வாகனங்களை தேர்தல் ஆணையம் பயன்படுத்திக் கொள்ளும். இதுவரை இந்தியா சார்பில் நேபாளத்துக்கு 2,400 வாகனங்கள் பரிசாக வழங்கப்பட்டு உள்ளன என்று காத்மண்டு நகரில் உள்ள நேபாளத்திற்கான இந்தியத் தூதரகம் தெரிவித்து உள்ளது.

# சென்னை சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் ஏறி இறங்குவதற்கான பாலம்

மீனம்பாக்கம், நவ.2

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுகொண்டிருக்கும் பன்னாட்டு நவீன முனையத்தில் விமானங்களில் பயணிகள் ஏறி செல் லவும், இறங்குவதற்காகவும் 'பசன்ஞ்சா போடிங் பிரிட்ஜ்' என்ற 15 நிரந்தர இணைப்பு பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்ற நிலையில் இவற்றில் ஏழு பாலங்கள் எதிர் வரும் டிசம்பர் மாதம் முதல் பாவனைக்கு திறக்கப்படவுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.



இந்த 'பசஞ்சா போடிங் பிரிட்ஜ்' விமான நிலையத்தின் நுழைவு பகுதியிலிருந்து நேரடியாக விமானத்தின் வாசலுக்கு செல்லும் விதமாக அமைக்கப்படுகின்றன. இந்த 15 பாலங்களில் 7 பாலங்கள் 47 மீட்டாகள் நீளமுடையவையாகவும், 7 பாலங்கள்?32 மீட்டரில் இருந்து 40 மீட்டாகள் கொண்டனவாகவும், மற்றொரு பாலம் 32 மீட்டா நீளம் உடையதாகவும் அமைய உள்ளது.

முதல் கட்டத்தில் 47 மீட்டா நீளமுடைய 7 பாலங்கள் பயன்பாட்டுக்கு வரவிருக்கின்றன.

மேலும், இந்த நவீன இணைப்பு பாலத்தில் நகரும் பாலங்கள் இரண்டும் அமைகின்றன.

அதில் அதிக நீளமுடைய 47 மீட்டா கொண்ட 7 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அந்த 7 பாலங்களும் வரும் டிசம்பர் மாதம் பயணிகளின்பயன்பாட்டிற்கு வர உள்ளன. மற்ற 8 பாலங்கள் அடுத்த 2 ஆவது கட்டத்தில் கட்டப்பட்டு செயல்பாட்டிற்கு வர இருக்கின்றன. இந்த பாலங்கள் 'மேக் இன் இந்தியா' திட்டப்படி உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளவை.

இதை போன்ற நவீன பாலங்கள் இந்தியாவில் முதல் முறையாக சென்னை விமான நிலையத்தில் அமைக்கப்படுகின்றன.

நீளமான இந்த இணைப்பு பாலம் பயன்பாட்டிற்கு வந்த பின் சென்னை விமான நிலையத்தில் விமானங்களில் ஏறி, இறங்கும் பயணிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அக்கரைப்பற்றில் இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் கருத்தரங்கு





(நூருல் ஹுதா உமர்)

விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் முனைவோர் கருத்தரங்கு இன்று அக்கரைப் பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.அன்சார் நளீமியின் வழிகாட்டுதலின் கீழ், அக்கரைப்பற்று பிர தேச இளைஞர் சேவை அதிகாரி ஏ.எம்.ஹாறூனின் ஆலோசனையின் பிரகாரம் அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் எம்.எம். றுக் சானின் தலைமையில், சம்மேளனத்தின் பொருளாளர் ஹிசாம் அவர்களின் ஒருங்கிணைப்பில் இது இடம் பெற்றது.

இந் நிகழ்வின் வளவாளராக குளோபல் அட்விசன் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும், இளைஞர் கழக சம்மேளன முன்னாள் தலைவருமான யூ.எம்.. தில்ஸான் கலந்து கொண்டு இளைஞர், யுவதிகளுக்கு விளக்கமளித்தார். இக் கருத்தரங்கில், முயற்சியாண்மை யின் தேவைப்பாடு, வெற்றிகரமான வணிகம் ஒன்றை நடத்தும் வழிமுறைகள், 20 சிறிய சுய தொழில் ஆலோசனைகள், சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள், அரச மற்றும் தனியார் துறையினரின் இலவச நிதி வசதி களை பெறும் வழிமுறைகள் என்பன தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இக் கருத்தரங்கில் அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை பிரதேசங்களை சேர்ந்த சுயதொழிலில் ஆர்வம் உள்ள 30 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர். இக்கருத்தரங்கில் தமது திறமையை வெளிக்காட்டிய பங்குபற்றுனருக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் நூல் அறிமுக விழா

(ஹஸ்பர்)

எழுத்தாளர் அ.ச.பாய்வாவின் குழல்வாய் மொழி இரு குறுங்காவியங்களின் நூல் அறிமுக விழா திருகோணமலை உவர்மலை சமூககற் கைகள் நிலையத்தில் 05-11-2022 சனிக்கிழமை மாலை 3.45 மணிக்கு 'நீங்களும் எழுதலாம்' ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம் பெறும்.

நிகழ்வின் முதன்மை அதிதியாக திருகோணலை வலயக் கல்விப்பணிப்பாளர் சி.சிறிதரனும் சிறப்பு அதிதிகளாக ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் ஓ.குலேந்திரனும் வைத்தியர் ஆய்வாளர் அ . ஸதீஸ்குமாரும் கலந்து சிறப்பிப் பார்கள். நிகழ்வில் வரவேற்புரையை சிரேஷ்ட ஊடகவி யலாளர் அ . அச்சுதன் வழங்க, நூல் விமர்சன உரைகளை கவிஞர்களான க. யோகானந்தன், தி. லலிதகோபன் ஆகியோர் வழங்குவார் கள்.

ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலா சிரியர் வழங்குவார்.

# கிழக்கில் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு சமூக வலைத்தள கையாளல் பயிற்சி வசதி





(வி.ரி. சகாதேவராஜா)

சமூக வலைத்தளங்களை கையாளும் முறைமை தொடர்பான பயிற்சி பட்டறைகள் கிழக்கு மாகாணம் எங்கும் நடத்தப்பட்டு வருகின்றன.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம் மேளனம் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தி ன் அனுசரணையில், சி.டி.எல்.ஜி. திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் செயல்படுகின்ற உள்ளூ ராட்சி மன்றங்களில் 50 வயதுக்குக் குறைந்த ஆண், பெண் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்காக இப் பயிற்சி பட்டறைகளை நடாத்தி வருகின்றது.

அம்பாறை மாவட்டத்துக்கான முதல் பயிற்சி பட்டறை அக்கரைப்பற்று மாநகர சபை மண் டபத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்றது.

அங்கு சமூக வலைத்தளங்களைக் கையாளு தல் தொடர்பாக விரிவான விளக்கம் அளிக்கப் பட்டது. நாளை மூன்றாம் திகதியும், மறுதினம் நான்காம் திகதியும் முறையே மட்டக்களப்பு மாவட் டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் இப்பட்டறைகள் நடாத்தப்பட இருக்கின்றன.

# கர்ப்பிணித் தாய்மாருக்கு காரைதீவில் 'நவபோஷா'







(காரைதீவு சகா)


ஐக்கிய ராஜ்ஜியத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு நலிவுற்றோர் அபிவிருத்தி சங்கம் (BUDS. UK) மற்றும் மட்டக்களப்பு மருத் துவமனைகளின் நண்பர்கள் சங்கம் (FOBH. UK) என்பவற்றின் நிதிப்பங்களிப்பில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு 'நவபோஷா' சத்துமா வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கல்முனை ஆதாரவைத்திய சாலையின் பிரதி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சாமித்தம்பி இராஜேந்திரன், காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர்,காரைதீவின் சமூக சேவையாளர் வி.ரி.சகாதேவராஜா, வைத்திய அதிகாரிகளான டாக்டர் த.உமாசங்கர், டாக்டர் க.ஹரிானந்த் , கல்முனை ஆதாரவைத்திய சாலை நிருவாக உத்தியோகத்தர் எஸ்.தேவஅருள், உத்தியோகத்தர் வி.சுந்தர் ஆகியோர் கலந்து நவபோா பொதிகளை வழங்கி வைத்தனர்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தி யட்சகர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரனிடம், காரைதீவின் சமூக சேவையாளர் வி.ரி.சகாதேவராஜா விடுத்த வேண்டுகோளுக் கிணங்க இருநூறு 'நவபோா' பொதிகள் காரைதீவுக்கு வழங்கப்பட்டன.

அதன் பலனாக காரைதீவு பிரதேசத்தில் ஒரு தொகுதி தாய் மார்களுக்கான சத்துமா பொதிகள் முதல் கட்டமாக வழங்கிவைக் கப்பட்டது. இரண்டு தினங்களுக்கு முன்னர் கல்முனை ஆதாரவைத் திய சாலையில் 800 பொதிகள் கல்முனைப் பிராந்திய கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை தெரிந்ததே.

# நீதி அமைச்சின் நடமாடும் சேவை கிளிநொச்சியில் நேற்று நடந்தது!





கிளிநொச்சியில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் கிளிநொச்சியில் அமைந்துள்ள திறன் விருத்தி வளாகத்தில் நேற்று (செவ்வாய்க் கிழமை)காலை 9 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.


கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்று இரண்டவது நாளாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெறும் இந் நடமாடும் சேவையில் நீதி, சிறைச்சாலை கள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதா ராஜபக்ஷ, அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் குமாரி, இழப்பீடுகளுக்கான பணிப்பாளர் நாயகம் எஸ்.எல்.எம். ஹஸீம் மற்றும் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலாளர்கள், மாவட்டசெயலகஉத்தியோகத்தர்கள், துறை சார் அதிகாரிகள், நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் அதிகாரிகள் , பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி நடமாடும் சேவையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம், ஆட்பதிவு திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களம், இழப்பீட்டுக்கான அலுவலகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் நாயகம் ஆகிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பங்குபற்றலுடன் இந்த நடமாடும் சேவை நடைபெறுகின்றது.

மேலும், பிறப்பு மற்றும் திருமண சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் , பிரஜாவுரிமை சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் , இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களுக்கான காணித்தேவை மற்றும் காணி உரிமை பிரச்சினைகள் ,வன்முறையால் பாதிக்கப்பட்ட சொத்து மற்றும் உயிரிழப்பு காயத்துக்கான நட்டஈடு பெற்றுக் கொள்ளல் ,தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல்,இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினூடாக ஏற்கனவே அனுப்பப்பட்ட கோவைகளை பூரணப்படுத்தல் தொடர்பான சேவைகளும் நடைபெற்றன.

அத்துடன் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தால் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கொடுப்பனவு, இறப்பு , காயமடைந்தவர்களுக்கான கொடுப்பனவு, அரசாங்க ஊழியர்களுக்கான கொடுப்பனவு ஆகியனவும் வழங்கிவைக்கப்பட்டன.

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் புருசோத்மனின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல்!







இராணுவத்தினரால் கடந்த 2008-11-01 அன்று படுகொலை செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் செல்லத்துரை புருசோத்தமனின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று (செவ்வாய்;க்கிழமை) நண்பகல் யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்களால் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

இதன் பொழுது செல்லத்துரை புருசோத்மனின் நினைவுருவபடத்திற்கு பல்கலை மாணவர்ளால் ஈகைச்சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தி அகவணக்கமும் இடம்பெற்றது. தொடர்ச்சியாக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சி.ஜெல்சினால் நினைவுரையும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவரான இவர் மிகவும் இக்கட்டான காலப்பகுதியில் (2006-2007) கலைப்பிட மாணவர் ஒன்றியத் தலைவராகப் பொறுப்பேற்று மாணவர் நலனிலும் பல்கலைக்கழக நலனிலும் அக்கறை கொண்டு செயற்பட்டதுடன் தமிழ்த்தேசிய நலனிலும் பற்றுடையவராகத் திகழ்ந்தார்.

இவர் சமூகவியற் துறையில் 2 ஆம் நிலையில் தேர்ச்சி பெற்று ஆளுமையுள்ள பட்டதாரியாக வெளியேறி குறுகிய காலப்பகுதியில் (01.11.2008) இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாவீரர் மாதத்தை முன்னிட்டு யாழ்.பல்கலை மாணவர்களால் நினைவேந்தல் முன்னெடுப்பு

மாவீரர் மாதத்தை முன்னிட்டு யாழ்.பல்கலை மாணவர்களால் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) மாவீரர்களை நினைவுகூரும் கார்த்திகை மாதம் ஆரம்பமாகியுள்ள நிலையில் யாழ்.பல்கலையில் அமைந்துள்ள நினைவுத்தூபி வளாகம் யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து நினைவுத்தூபிக்கு ஆத்மார்த்தரீதியாக மலரஞ்ஞலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உணவு வகைகளின் விலைகள் குறைந்தன

உணவு வகைகள் சிலவற்றின் விலையை 10 ரூபாவால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த விலை குறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ரோல்ஸ், பரோட்டா, முட்டை ரொட்டி, காய்கறி ரொட்டி ஆகியவற்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு சாதாரண தேநீர் 30 ரூபாவுக்கும் ஒரு பால் தேநீர் 100 ரூபாவுக்கும் விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படுவதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

## பைசர் தடுப்பூசிகளை இனிமேல் மக்கள் பெற்றுக்கொள்ள முடியாது

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொரோனாவுக்கு பயன்படுத்தப்படும் பைசர் தடுப்பூசிகளை நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் மக்கள் பெற்றுக்கொள்ள முடியாது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 6 லட்சம் பைசர் தடுப்பூசிகள் திங்கட்கிழமை காலாவதியானதையடுத்து தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பைசர் தடுப்பூசிகள் பூஸ்டர் டோஸூக்காக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதுடன், மேலும் அந்த அளவின் ஒரு பகுதி இரண்டாவது பூஸ்டர் டோஸூக்கும் பயன்படுத்தப்பட்டது.

60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 27 லட்சம் பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளனர் என்றாலும் சுமார் 2 லட்சம் பேர் மட்டுமே இரண்டாவது பூஸ்டர் டோஸைப் பெற்றுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் இந்த பைசர் தடுப்பூசிகள் காலாவதியானாலும் உடனடியாக அழிக்கப்படாது என்றும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். இதேவேளை, திங்கட்கிழமை புதிதாக 17 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக அரசாங்கத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி, இலங்கையில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆறு லட்சத்து எழுபதாயிரத்து எழுபதாக பதிவாகியுள்ளது.

## அம்பாறையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சித்தியடைந்த மாணவர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்வி என்பது எட்டாக்கனியாக இருந்த காலம். அதை நாங்கள் மறக்க முடியாது. நாங்கள் கல்வியைத் தேடி கற்றவர்கள்.

இந்தப் பிரதேசத்தில் அதிபர்கள் அதிகமாக இருக்கின்றனர். இதில் சிலர் பாடசாலையின் கடமைகளைச் செய்து விட்டு போகவேண்டும் என்ற சிந்தனையில் இருக்கின்றனர். ஆனால், இந்தப் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி எஸ்.சிறியபுஸ்பம் அரசியல்வாதிகளை மாத்திரமல்ல மாகாண ஆளுநரையும் சந்தித்து பாடசாலையின் குறைபாடுகளை எடுத்துரைத்து வளங்களைத் தேடிப்பெற்றஒருபெரும்சேவையாளராக இருக்கின்றார்.

சமூகத்தைச் சிறப்பாக வழிநடத்தக் கூடிய தலைவராக இவர் திகழ்வார் என்பதற்கு இன்றைய விருதுகள் சான்றாக அமைகின்றன.

சொறிக்கல்முனை மக்களால் இவ்வாறான விழா எடுக்கப்பட்டு இவருக்குப் பாராட்டுச் செய்வது உண்மையிலே பெரும் சிறப்பாக அமைந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களாக இருக்கின்ற நாங்கள் குறைந்த நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எம்மை நசுக்கி ஆளுகின்ற அரசியல் தலைவர்கள், பெரும்பான்மை சிங்கள மக்களை விட சகோதர முஸ்லிம் மக்கள் மத்தியில் இருந்து கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தமிழர்களுடையஎதிர்காலத்தைக் குழிதோண்டிப் புதைக்கின்ற செயற்பாடுகளிலே இருந்து கொண்டிருக்கின்றார்.

அவரின் செயற்பாட்டின் மூலம் இந்த இனங்களுக்கிடையே இருக்கின்ற ஒற்றுமை இல்லாமல் போய்விடும் நிலைமை அதிகமாகவுள்ளது.

நான் ஏனைய சமூகங்களை இணைத்துப் பயணிக்கின்ற அரசியல்வாதியாக இருந்திருக்கின்றேன். அவர் இன்றும் கூட தமிழர்கள் இரட்டை வேடம் போடுகின்றனர் என்று ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இரட்டை வேடம் போட்டவர்கள் அல்லர்; ஒரு சமூகத்தை அழிக்கின்ற பணிகளை முன்னெடுத்தவர்கள் அல்லர். அந்தப் பணியைமுன்னெடுக்கின்றஓர்அரசியல்வாதியே கல்முனை பிராந்தியத்தில் உள்ள நாடாளுமன்ற உறப்பினர் ஹரீஸ்.

இந்நாட்டிலே தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் செயற்பட்டுவரும் ஒரேயொரு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான். அந்தத் தமிழ் பேசும் என்பதுதமிழர்களையும், முஸ்லிம்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

நாங்கள் ஒரே சிந்தனை; ஒரே கொள்கை; ஒரே கோட்பாடு. நாங்கள் வருகின்ற அரசுக்கு எல்லாம் கையை உயர்த்திவிட்டு காலில் விழுபவர்கள் அல்லர். நாங்கள் துணிகரத்தோடு உண்மையை – நியாயத்தை – அநீதியை தட்டிக்கேட்கின்ற அரசியல்வாதிகளாகச் செயற்படுகின்றோமே தவிர சலுகைகளுக்கும் துணையாக இருந்து செயற்படுபவர்கள் அல்லர் என்பதை ஹரீஸுக்கு சொல்லி வைக்கின்றேன் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

